# M5 அகரமுதலி அல்லது கலைக்களஞ்சியத்தில் விரைவாக ஒன்றைக் கண்டுகொள்ளல்

பல உசாத்துணை நூல்கள் அகர வரிசையிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளன: எழுத்தொலிப்புக்கான அகரமுதலிகள், இருமொழி அகரமுதலிகள், கலைக்களஞ்சியங்கள், தொலைபேசி நூல்கள், விவர அட்டைகள், முதலியன. இந்நூல்கள் எங்களுக்கு மிகவும் பயனுடையன. ஏனெனில் அவை இன்றியமையாத தகவல்களைக் கொண்டுள்ளன. நாம் அவற்றைக் கட்டாயம் பயன்படுத்தத் தெரிந்திருக்கவேண்டும். எனினும், நெடுங்கணக்கை நாம் கையாளும் சில உத்திகளை அறிந்தால் மட்டுமே இதனைச் செய்யமுடியும்.

**கவனிக்க:** நெடுங்கணக்கிலுள்ள எழுத்துகளின் தொடர்வரிசை அனைத்து மொழிகளிலும் ஒன்றாயிருப்பதில்லை, பல மொழிகளில் சிறப்பான எழுத்துக்கள் உள்ளன. வகுப்பில் இதைக் கலந்துரையாடுக!

இங்கு நீங்கள் மிக அத்தியாவசியமான "விளையாட்டு விதிகளை" மற்றும் அகரவரிசையில் அமைக்கப்பட்ட உசாத்துணை நூல்களைப் பயன்படுத்துதற்கான குறிப்புகளை அறிவீர்கள்.

## 5.1

### அஆஇஈ யை மனனம் செய்க

அஆஇஈ யை எவ்வித சிக்கலுமின்றி நினைவிலிருந்து ஒப்புவிக்கும்வரை மனனம் செய்க. குறிப்புகளைப் பயிற்சிசெய்யவும்:

- எழுத்துகளைப் பிரிவுகளாகக் கற்க:

  **அ ஆ இ ஈ**

  **உ ஊ எ ஏ**

  **ஐ ஒ ஓ ஔ**

  உங்களுக்குத் தெரிந்த அஆஇஈ எனத் தொடங்கும் ஒரு பாட்டுப் பாடுக, அல்லது நீங்களே ஒரு பாட்டை அமைத்துப் பாடுக.

- அஆஇ முழுமையாக எழுதப்பட்ட ஒரு நீண்ட தாள் துண்டு உருவாக்கவும். அதை பார்க்காமல் ஒரு எழுத்தை விரலால் மறைக்கவும். எந்த எழுத்து மறைக்கப்பட்டுள்ளது?
- ஒவ்வொரு எழுத்தையும் ஒரு சிறிய தாளில் எழுதவும். சிறிய தாள் துண்டுகளை கலக்கவும். பின்னர் அவற்றிலிருந்து இரண்டை எடுத்து விரைவில் முடிவுசெய்யவும்: அஆஇ வரிசையில் எந்த எழுத்து மற்ற எழுத்துக்கு முன் வருகிறது?
- இப்பொழுது முன் செய்ததை மூன்று தாள் துண்டுகளுடன் செய்க, எடுத்த மூன்று எழுத்துக்களை அஆஇ வரிசையில் ஒழுங்குபடுத்துக.
- தாள் துண்டுகளை எடுத்து அதில் ஒன்றை எடுத்து விரைவாக முடிவுசெய்க: இந்த எழுத்து அஆஇ வரிசையில் தொடக்கத்திலா நடுவிலா அல்லது முடிவிலா இடம்பெறுகிறது?
- எழுத்துள்ள ஒரு துண்டை எடுக்கவும். பின்னர் அந்த எழுத்தில் தொடங்கும் சொற்கள் அண்ணளவில் இருக்கிற இடத்தில் அகரமுதலியைத் திறக்கவும் (எ.கா. ஈயில் தொடங்கும் சொற்கள் தொடக்கத்திலும் வ வில்தொடங்குவன நெடுங்கணக்கின் முடிவுப் பகுதியிலும் அமைவன.)
- ஒரு பட்டியல் அமைக்குக (எ.கா. விலங்குகள் அல்லது தாவரங்கள்) அவற்றை நெடுங்கணக்கு ஒழுங்கில் அமைக்குக.



## 5.2

### அகரமுதலிகள் கலைக்களஞ்சியங்களின் கட்டமைப்பு:

எல்லாச் சொற்களும் நெடுங்கணக்கு வரிசையிலே அவற்றின் முதல் எழுத்தடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன, (முதலாவது அ சொற்கள் அடுத்து ஆ சொற்கள், முதலியன: அப்பிள் – ஆமை – இலை …)

தலைப்புக்குள் முதல் எழுத்துடன் தொடங்கி, இரண்டாவது எழுத்தில் சொற்கள் ஒழுங்கமைக்கப்படும். (அ – சொற்கள், முதலில் அ, அடுத்து அக், அதன்பின் அக, அகா, அகி முதலியன: அ, அக்கா, அகம், அகாசி, அகில்)

இரண்டு எழுத்துகளின் பின்னர் மூன்றாவது எழுத்தின்படி சொற்கள் வரிசைப்படுத்தப்படும்: அங்கு பயிற்சிக்கு குறிப்புகள் (இது இணையராக பயிற்சி செய்யச்சிறந்தது):

- ஒரே முதல் எழுத்துடன் தொடங்கும் விலங்குகளின் அல்லது நாடுகளின் பெயர்ப்பட்டியலை ஆக்குக (எ.கா. இலங்கை, இங்கிலாந்து, இந்தியா, இத்தாலி), அடுத்து இவற்றை இரண்டாவது எழுத்துப்படி ஒழுங்குபண்ணுக.
- சிறிய தாள் துண்டுகளை எடுத்து அகரமுதலியில் உள்ள ஒரே எழுத்தில் தொடங்கும் பெயர்களை எழுதவும், தாள் துண்டுகளை கலக்கவும் பின்னர் இரண்டாம் மூன்றாம் எழுத்துக்களின் படி ஒழுங்குபடுத்தவும்.
- அகரமுதலியை எடுத்து இருவராகப் பின்வரும் வினாக்களைக் கேட்கவும்: "முதலில் என்ன வரும் கொடு அல்லது கூடு? குருவி அல்லது குதிரை? பாட்டு அல்லது பூட்டு?"

---

## 5.3


### தலைப்புச் சொற்கள் பயன்படுத்தவும்!

தலைப்புச் சொற்கள் என்பன பெரும்பாலான அகரமுதலிகளின் ஒவ்வொரு பக்கத்தின் அல்லது இரட்டைப் பக்கத்தின் மேலே காணப்படும் சொற்களாகும். அவை, எடுத்துக்காட்டாக, "கதை" தொடக்கம் "கப்பி" வரையான சொற்கள் இந்த (இரட்டைப்) பக்கத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன என்பதை உங்களுக்குத் தெரிவிக்கின்றன. இந்த வகையில் நீங்கள் தேடும் சொல் இந்தப் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா? என்பதை விரைவாக முடிவுசெய்யலாம்.

பயிற்சிக்கு குறிப்புகள்:

- சில சொற்களை எழுதவும், பின்னர் அகரமுதலியில் குறிப்பிட்ட சொல் தலைப்புகளில் கருத்தூன்றி, அச்சொற்களைப் பார்க்கவும்.
- இருவராக வினாக்களைக் கேட்கவும்: "'கரடி' என்னும் சொல் உள்ள பக்கத்தின் தலைப்புச் சொற்கள் எவை?" – "எந்த தலைப்புச் சொற்களுக்கிடையே 'வாழை' என்னும் சொல் காணப்படும்?"

தலைப்புச் சொற்கள்




---

## 5.4

### அகரமுதலியில் நீங்கள் சொற்களைத் தேடும்போது கவனிக்கவேண்டியவை.

- கூட்டுச்சொற்களை அடையாளம் காண முடியாவிட்டால், தனிச்சொற்களைப் பார்க்கவும், (எடுத்துக்காட்டு: "பாடும்மீன" என்னும் சொல்லைக் காணமுடியாவிடில், "பாடும" மற்றும் "மீன" என்பனவற்றைப் பார்க்கவும்.
- பெயர்ச்சொற்கள் எப்போதும் அகரமுதலியில் ஒருமையிலேயே பட்டியலிடப்படும். எனவே ஒரு பெயரின் பன்மையைத் தேடினால் (எ.கா. "பெண்கள" நீங்கள் ஒருமை வடிவம் "பெண" என்பதையே பார்க்க வேண்டும். அதில் பன்மை வடிவம் "பெண்கள" என்பதனை நீங்கள் எதிர்கொள்ளலாம்.
- வினைகள் ஏவல் வடிவிலேயே பட்டியலிடப்படும். எனவே குறிப்பிட்ட வடிவத்திலே ஒரு வினையை நீங்கள் தேடினால் (எ.கா. "நான் படித்தேன" வினையின் அடிச்சொல் வடிவத்தையே பார்க்கவேண்டும் ("படி" என்பதன் கீழ் பார்க்கவேண்டும்).